**துணை ஆணையர்(மாவ)(நுண்ணறிவு)(முகூபொ), சேலம் அவர்களின் செயல் முறைகள்**
**பிறப்பிப்பவர்: திருமதி த. நல்லரசி,M.A.,D.T.Ed.,**

செ.மு.ந.க. 1672/2019/அ1 நாள்: 20.02.2020

பொருள்: பொதுப் பணிகள் - வணிக வரித் துறை - சேலம் நுண்ணறிவுப் பிரிவு- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டுகளுக்கான தொகுதி- IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பட்டியல் வரப்பெற்றது - இளநிலை உதவியாளர்களுக்கு, பணியேற்பு ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 அவர்களின் கடிதம் எண்:1332/PSD-G1/2019 நாள்: 16.02.2019.
2. இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செ.மு.ந.க.22254/2018/அ2 நாள்:25.02.2019.
3. துணை ஆணையர்(மாவ), நாமக்கல் அவர்களின் செ.மு.ந.க.1054/2019/அ1 நாள்: 28.02.2019.

******

**ஆணை:**

பார்வை 1இல் காணும் கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டுகளுக்கான தொகுதி-IVல் அடங்கிய தேர்வின் மூலம் தெரிவு செய்து, பார்வை 2-ல் காணும் இணை ஆணையர்(மா.வ), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறைகள் ஆணையின் படி நாமக்கல் வணிக வரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் துணை ஆணையர்(மாவ), நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ஆணையின் படி பணி நியமனம் வழங்கப்பட்டு சங்ககிரி உதவி ஆணையர்(மாவ) அலுவலகத்தில் பணியில் சேர்ந்து 2019-ம் ஆண்டு பொது மாறுதலில் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் கீழ்க்கண்ட இளநிலை உதவியாளருக்கு பணி வரன்முறை செய்தும் தகுதி காண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி | அரசுப் பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணி வரன்முறை செய்து தகுதி காண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி த. ரோஜாஸ்ரீ, இளநிலை உதவியாளர். | 28.02.2019 பிற்பகல் | 28.02.2019 பிற்பகல் |

**"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble Court of Madras relating to Combined Civil Services Examination-IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment".**

2. மேலும் இப்பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 28.02.2019 பிற்பகல் முதல் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தினராக இருக்க வேண்டுமெனவும், பணியில் சேர்ந்த மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை(DOM) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

ஓம்/.த. நல்லரசி,
துணை ஆணையர்(மா.வ)
(நுண்ணறிவு)(மு.கூ.பொ), சேலம்.

//உண்மை நகல் உத்தரவுப்படி//

20/02/2020
துணை மாநில வரி அலுவலர்/மேலாளர்

பெறுநர்

உரிய பணியாளர். 20/02/2020

நகல்: 1. இணை ஆணையர்(மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

2. இணை ஆணையர்(மாவ)(நுண்ணறிவு), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.